1974 மார்ச் 14]

கும்முடிப்பூண்டி பகுதியில் நீர் வழங்கல்.

*415. வின—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பரா ?

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், காணுபுத்தூர் அரிசனக் காலனியில் குழாய்க் கிணறு குடிநீர்த்திட்டம் நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கும்முடிப் பூண்டித் துணை வட்டம் காணுப்புத்தூர் அரிசன காலனியில் குழாய் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு முதலில் குழாய்கிணறு நடப்பு ஆண்டிலேயே அமைக்க செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் சென்ற ஆண்டே தொடங்கப்பட்டும், இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, எப்போது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, குழாய்க் கிணறு திட்டத்திற்கு 5,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த போர் வெல்லிலிருந்து கிடைக்கின்ற தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கு உள்ளது தானு என்பதை கண்டறிவதற்காக கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிடு யூட்டுக்கு அனுப்பப்படும். அங்கே இருந்து பதில் கிடைத்தவுடன் அது குடிப்பதற்கு ஏற்ற நல்ல தண்ணீர்தான் என்று பதில் கிடைத்தால், திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

*416 வின—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா?

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுபுழல் பேட்டை அரிசனக் காலனியில் குடிநீர்த் திட்டம் அமைப்பதில் காலதாமதம் ஆவதன் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுபுழல் பேட்டை அரிசனக் காலனியில் குடிநீர் வசதி அளிப்பதற்காக ரூ. 5,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு குழாய் கிணறு அமைக்க செங்கல்பட்டு மாவட்ட நல அதிகாரி நடவடிக்கை எடுத்து வருகிருர். நடப்பு நிதிஆண்டில் வேலை முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் மாவட்ட நல அதிகாரி ஒருவரே இருந்து கவனிக்கவேண்டியிருப்பதுதான்,